


**19. 01. 2026**

தலைப்புச் செய்திகள்

1. தேசிய பேரிடர் மீட்பு படையினர் அளப்பரிய சேவையாற்றி பேரிடர் காலங்களில் மக்களிடையே நம்பிக்கையை நிலைநாட்டுவதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

2. திரைத்துறையில் தன்னிகரற்ற சாதனை புரிந்தமைக்காக பிரபல இசையமைப்பாளர் இளையராஜாவிற்கு பத்ம பானி விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

3. செங்கல்பட்டு மாவட்டம் நெம்மேலியில் 343 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான மாமல்லன் நீர்தேக்கத்திற்கு முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டினார்.

4. தமிழக சட்டப்பேரவையின் நடப்பாண்டிற்கான முதல் கூட்டத்தொடர் ஆளுநர் உரையுடன் நாளை தொடங்குகிறது.

5. தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகளுக்கான கால அவகாசம் வரும் 30ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இனி விரிவான செய்திகள்

****************

பிரதமர்

பேரிடரின்போது தேசிய பேரிடர் மீட்பு படையினர் அர்ப்பணிப்புடன் செயலாற்றி எண்ணற்ற உயிர்களை பாதுகாத்து நிவாரணம், மீட்பு நடவடிக்கைகளை முனைப்புடன் மேற்கொண்டு நம்பிக்கையை நிலைநாட்டுவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

தேசிய பேரிடர் மீட்பு படை நிறுவன தினத்தை ஒட்டி இன்று பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் இப்படையினரின் திறமைகளும், கடமை உணர்வும், உயர்தர சேவை, செயலாக்கத்தை வெளிப்படுத்துவதாக புகழாரம் சூட்டியுள்ளார்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், செயலாக்கம், அளப்பரிய பணி போன்றவற்றின் மூலம் சர்வதேச அளவில் தனி முத்திரையை இவர்கள் பதித்துள்ளதாக பெருமிதம் தெரிவித்தார்.

தேசிய பேரிடர் மீட்பு படையில் பணியாற்றும் இருபாலரின் தொழில் நேர்த்தியையும், துணிச்சலையும், வீரத்தையும் பிரதமர் வெகுவாக பாராட்டியுள்ளர்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா வெளியிட்டுள்ள செய்தியில் இயற்கை பேரிடர்களின்போது நாட்டின் நம்பிக்கை தூணாக திகழும் இப்படையினரின் சேவைக்கு தலை வணங்குவதாக குறிப்பிட்டுள்ளார்.

****************

சிவ்ராஜ்சிங் சவ்ஹான்

வளர்ச்சி அடைந்த பாரதத்திற்கான ஊரக வேலை வாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார திட்டம் ஒவ்வொரு கிராம குடியிருப்புக்கும் 125 நாட்கள் வேலை உத்தரவாதம் அளிப்பதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவ்ராஜ்சிங் சவ்ஹான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த திட்டத்தின் கீழ் SC, ST பிரிவினருக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கும் மகளிருக்கும் ஏழை எளிய மக்களுக்கும் உயர் முன்னுரிமை வழங்கப்படுவதாக அமைச்சர் கூறினார்.

மாற்றியமைக்கப்பட்ட இப்புதிய சட்டத்தின் கீழ் குறிப்பிட்ட காலத்திற்குள் மாநில அரசு பணி வழங்காத பட்சத்தில் சிறப்பு உதவிதொகை வழங்குவதற்கான வசதி செய்யப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ், உருவாக்கப்பட்ட 10 கோடி அளவிற்கான சொத்துக்களில் எட்டரை கோடி அளவிற்கான சொத்துக்கள் பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையிலான அரசு உருவாக்கியதாக அவர் எடுத்துரைத்தார்.

25 கோடி பேர் வறுமையிலிருந்து மீட்கப்பட்டதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக உறுதி திட்டத்திற்கான காங்கிரஸின் செயல்பாடுகள் வெறும் எழுத்து அளவிலேயே இருந்ததாகவும், நாடு மற்றும் ஏழைகளின் மேம்பாட்டில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

வளர்ச்சி அடைந்த பாரதம், ஊரக வேலை உறுதி திட்டம் குறித்து காங்கிரஸ் கட்சி தவறான தகவல்களை பரப்பி வருவதாகவும் திரு.சிவ்ராஜ்சிங் சவ்ஹான் குற்றம் சாட்டினார்.

****************

ஸ்டேட்வங்கி

நாட்டின் தனிநபர் வருமானம் இன்னும் நான்காண்டுகளில், நான்காயிரம் டாலர் அளவிற்கு எட்டும் என்று பாரத ஸ்டேட் வங்கி தெரிவித்துள்ளது.

இன்னும் இரண்டு ஆண்டுகளில் நம் நாடு ஐந்து ட்ரில்லியன் டாலர் பொருளாதாரத்தை எட்டும் என்றும் கணித்துள்ளது.

ஒட்டுமொத்த உள்நாட்டு வளர்ச்சி பெருமளவில் அதிகரித்ததன் மூலம் வேகமாக வளரும் பொருளாதார நாடாக இந்தியா உருவெடுத்து வருவதாகவும் இந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

தற்போதைய உலக வங்கியின் தர வரிசை பட்டியலில் சீனா மற்றும் இந்தோனேஷியா நாடுகளுக்கு இணையாக இந்தியாவும் இடம்பெறும் என்றும் பாரத ஸ்டேட் வங்கியின் அறிக்கை தெரிவிக்கின்றது.

****************

இளையராஜா

இந்திய திரைத்துறையில் தன்னிகரற்ற சாதனை புரிந்தமைக்காக பிரபல இசை அமைப்பாளர் இளையராஜாவிற்கு பத்ம பானி விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

வரும் 28ஆம் தேதி மகராஷ்டிரா சத்ரபஜி சாம்பாஜி நகரில் நடைபெற உள்ள, 11ஆவது அஜந்தா எல்லோரா சர்வதேச திரைப்பட விழாவின்போது, இவ்விருது அவருக்கு வழங்கப்படுகிறது.

பத்மபானி நினைவு கேடயம், சான்றிதழ், 2 லட்சம் ரூபாய் ரொக்கத்தை உள்ளடக்கியதாகும் இவ்விருது.

மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் மற்றும் மகராஷ்டிராவின் கலாச்சார விவகாரங்கள் துறை சார்பில் இந்த விருது திரு. இளையராஜாவிற்கு வழங்கப்படுகிறது.

***************

தேசிய தலைவர் - தலைவர்

பிஜேபி தேசிய தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான வேட்பு மனு தாக்கல் இன்று நடைபெறுகிறது.

புதுதில்லியில் கட்சி தலைமையகத்தில் பிற்பகல் 2 மணிமுதல் 4 மணிவரை வேட்பு மனு தாக்கல் நடைபெறும்.

நாளை வாக்குப்பதிவு நடைபெறும்.

***************

முதலமைச்சர்

செங்கல்பட்டு மாவட்டம் நெம்மேலியில் நீர்வளத்துறை சார்பில் 343 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான மாமல்லன் நீர்தேக்கத்திற்கு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய முதலமைச்சர், 5 ஆயிரத்து 161 ஏக்கர் பரப்பில் 1.6 டி.எம்.சி நீரை தேக்கும் வகையில் இந்த நீர்தேக்கம் அமையும் என்றும், இதன்மூலம் 13 லட்சம் மக்களுக்கு குடிநீர் விநியோகிக்க முடியும் என்று கூறினார்.

பக்கிங்ஹாம் கால்வாயில் உப வடி நிலத்தில் இந்த புதிய நீர்தேக்கம் அமைய உள்ளதாக குறிப்பிட்டார்.

69 ஏரிகளிலிருந்து வரும் உபரிநீரை சேமித்து மாமல்லன் ஏரி அமைய உள்ளதாக கூறிய அவர், சுற்றுப்புற மக்களுக்கு இதில் மீன்பிடிக்க உரிமம் வழங்கப்படும் என்றார்.

சென்னையின் புதிய அடையாளங்களாக உருவெடுத்துள்ள பகுதிகளுக்கு குடிநீர் வழங்குவதை நோக்கமாக கொண்டு இந்த நீர்தேக்கம் அமைக்கப்படுவதாக முதலமைச்சர் கூறினார்.

தாமிரபரணி, கருமேனியாறு நம்பியாறு இணைப்பு திட்டத்தை தமது தலைமையிலான அரசு சாத்தியமாக்கியதாக அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த 5 ஆண்டுகளாக காவிரி படுகை பகுதிகளில் 459 கோடி ரூபாய் மதிப்பில் தூர்வாரும் பணிகள் நடைபெற்றதால் கடை மடை விவசாயிகள் பயனடைந்ததாக அவர் எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் 15 அரசு சாரா நிறுவனங்களுக்கு சிறந்த நீர்பாதுகாப்பு விருதுகளை முதலமைச்சர் வழங்கினார்.

****************

சட்டப்பேரவை

தமிழக சட்டப்பேரவையில் இந்த ஆண்டின் முதல் கூட்டத்தொடர் ஆளுநர் உரையுடன் நாளை தொடங்குகிறது.

இக்கூட்டத்தொடரை எத்தனை நாட்கள் நடத்துவது என்பது குறித்து அலுவல் ஆய்வுக்குழு கூடி முடிவு செய்யும்.

***************

வாக்காளர் பட்டியல்

தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகளில் ஏற்புரைகள், மறுப்புரைகளுக்கான கால அவகாசம் வரும் 30ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக மாநில தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் அறிவித்துள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் பொதுமக்கள் இந்த நீட்டிக்கப்பட்ட காலக்கெடுவை பயன்படுத்திகொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளார்.

இதற்கான காலஅவாசம் நேற்றுடன் முடிவடைந்த நிலையில், இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

***************

பிரகாஷ் மீனா

அம்ரித் பாரத் திட்டத்தின் கீழ் சிவகங்கை மாவட்டம் காரைக்குடி ரயில் நிலையத்தில் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பணிகளை மதுரை ரயில்வே கோட்ட மேலாளர் ஓம்.பிரகாஷ் மீனா இன்று ஆய்வு செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த ரயில் நிலையம் புதுப்பிக்கப்பட்டு தயார்நிலையில் உள்ளதாக கூறினார்.

காரைக்குடியிலிருந்து - சென்னைக்கு புதிய ரயில்கள் இயக்குவது குறித்து ரயில்வே துறைக்கு கோரிக்கை அனுப்பப்படும் எனவும் தெரிவித்தார்.

****************

நெல்கொள்முதல்

பெரம்பலூர் மாவட்டத்தில் வேலூர், வேப்பந்தட்டை, வட்டாரங்களுக்குட்பட்ட 15 இடங்களில், நுகர்பொருள் வாணிப கழகத்தின் சார்பில், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் நாளை மறுநாள் திறக்கப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

****************

இருவரி

தேசிய சாலை பாதுகாப்பு மாதத்தை ஒட்டி திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணியை ஆட்சித்தலைவர் திருமதி சிவசௌந்தரவள்ளி இன்று தொடங்கிவைத்தார்.

50க்கும் மேற்பட்ட வாகன ஓட்டிகள் சாலை பாதுகாப்பை வலியுறுத்தும் பதாகைகளை ஏந்தியவாறு இதில் பங்கேற்றனர்.

பொங்கல் பண்டிகையை ஒட்டி கன்னியாகுமரி சுவாமி விவேகானந்தர் நினைவு மண்டபத்தை 72 ஆயிரம் சுற்றுலா பயணிகள் பார்வையிட்டதாக பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழகம் தெரிவித்துள்ளது.

மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம், கொள்ளிடம் ஆகிய வட்டார பகுதிகளில் இன்றுமுதல் வரும் 6ஆம் தேதிவரை தீவிர தொழுநோய் கண்டறியும் இயக்கம் நடைபெறுவதாக ஆட்சித்தலைவர் திரு.ஸ்ரீகாந்த் தெரிவித்துள்ளார்.

***************

ஜல்லிக்கட்டு

திருச்சி நவலூர் குட்டப்பட்டு கிராமத்தில் தை பொங்கலை ஒட்டி பாரம்பரிய ஜல்லிக்கட்டு போட்டி விறுவிறுப்பாக இன்று நடைபெற்று வருகிறது.

திருச்சி கரூர், அரியலூர் புதுக்கோட்டை மதுரை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட 600 காளைகளை அடக்க 300 மாடுபிடி வீரர்கள் களத்தில் உள்ளனர்.

வெற்றிபெற்றவர்களுக்கு வீட்டு உபயோக பொருட்கள் பரிசாக வழங்கபட்டு வருகின்றன.

ஆயிரக்கணக்கான கிராம மக்கள் இந்த வீர விளையாட்டை ஆர்வத்துடன் கண்டு ரசித்து வருகின்றனர்.

காவல்துறையினர் பாதுகாப்பு பணிகளை முனைப்புடன் மேற்கொண்டு வருகின்றனர்.

***************

புலிகள்

நெல்லை களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகத்தில் புலிகள் கணக்கெடுக்கும் பணி இன்று தொடங்கியுள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

***************

கலை நிகழ்ச்சி

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி, மயிலாடுதுறை உள்ளிட்ட இடங்களில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சார்பில் கலை சங்கமம் விழா இன்று நடைபெற்றது.

பாரம்பரிய கலைஞர்களின் கரகாட்டம், நையாண்டி மேளம், தெருகூத்து குழு பரத நாட்டியம், குச்சிபுடி நடனம் உள்ளிட்ட கலைநிகழ்ச்சிகள் இதில் இடம்பெற்றன.

ஏராளமான கலை ஆர்வலர்கள் இதனை கண்டு ரசித்தனர்.

***************

கோவில்

மதுரை திருப்பரங்குன்றம் அருள்மிகு முருகன் திருக்கோவில் தெப்பத்திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

***************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.